ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2179/21 - 2020 ජූනි මස 10 වැනි බදාදා - 2020.06.10

*2179/21 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

***1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் அறிவித்தல்***

*1984 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க விநோத வரி (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட விநோத விடயங்களுக்காக அறவிடப்படுகின்ற நுழைவுக் கட்டணத்தில் இருந்து அறவிடப்பட வேண்டிய வரியின் விகிதம் கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள விதத்தில் விதித்து 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்காக அறவிடுவதற்காக 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2 (1) ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளுக்கமைய கொழும்பு மாநகர சபை 2018.10.29 ஆந் திகதியில் அங்கீகரித்துக்கொண்டுள்ள பிரேரணையை, மேல் மாகாணத்தின் கௌரவ முதலமைச்சரும், நிதி மற்றும் திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம், பொருளாதார மேம்பாடு, மின்வலு மற்றும் எரி சக்தி, சுற்றாடல் விவகாரங்கள், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரான இசுர தேவப்பிரிய ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (விளைவாந்தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க விநோத வரி கட்டளைச் சட்டத்தின் 2 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு கிடைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அங்கீகரித்துள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.*

**இசுர தேவப்பிரிய,**
மேல் மாகாணத்தின் முதலமைச்சரும், நிதி மற்றும்
திட்டமிடல், பொறியியல் சேவைகள், சட்டம் மற்றும்
ஒழுங்கு, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிருவாகம்,
பொருளாதார மேம்பாடு, மின்வலு மற்றும் எரி சக்தி,
சுற்றாடல் விவகாரங்கள், நீர்வழங்கல் மற்றும்
வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான
அமைச்சர்.

*மாகாண சபைக் கட்டடத் தொகுதி,*
*இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,*
*பத்தரமுல்ல,*
*2019, ஏப்பிறல் 18.*

1A - PG 4980 — 22 (2020/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*அட்டவணை*

| | பிரிவு | விநோத விடயத்தின் தன்மை | விகிதம் |
|---|---|---|---|
| 01 | A | • சினிமா திரையரங்கு | 10% |
| 02 | B | • வெளிநாட்டு கலைஞர்களின் சகல கச்சேரிகளுக்காக, Carnival களியாட்டங்கள் | 10% |
| 03 | C | வர்த்தக நோக்கத்துடன் நடாத்தப்படுகின்ற உள்நாட்டு கலைஞர்கள் பங்கு பற்றும் சகல கச்சேரிகளுக்காக | 10% |
| 04 | D | • உள்நாட்டு கலைஞர்கள் கலந்து கொள்ளும் உணவுப் பானங்களின்றிய விலையில் DJ கச்சேரி மற்றும் வேறு நடனம் பாடல் அடங்களான கச்சேரி<br>• சர்வதேச விளையாட்டுப் போட்டிகள்<br>• நலன்புரிச் சங்கம், பழைய மாணவர் சங்கம் போன்ற சங்கங்களினால் நடாத்தப்படுகின்ற கச்சேரி | 10% |
| 05 | E | • செயற்படும் மட்டத்திலுள்ள கலைஞர் சங்கத்தின் தலைமையில் நடாத்தப்படும் கச்சேரி (ஒரு வருடத்திற்கு அதிகூடிய கச்சேரிகளின் எண்ணிக்கை 03)<br>• உள்நாட்டு விளையாட்டுப் போட்டி<br>• உள்நாட்டு மேடை நாடகம் பாடல் அடங்களான கச்சேரி | 08% |
| 06 | F | • தற்சமயம் புகழ்பெற்ற கலைஞர் ஒருவரினால் தமது வாழ்க்கையின் முக்கிய சந்தர்ப்பமாக கொண்டு நடாத்தப்படுகின்ற கச்சேரியொன்றுக்காக (வாழ்நாளில் ஒருமுறை மட்டும்)<br>• பாடசாலையொன்றில் பாடசாலையின் நலன்புரிக்காக நடாத்தப்படுகின்ற விண்ணப்பதாரி அதிபராக இருக்கின்ற, வலய கல்விப் பணிப்பாளரின் அங்கீகாரத்துடனான கச்சேரி<br>• பாடசாலையொன்று அல்லது பழைய மாணவர் சங்கமொன்று அல்லது பாடசாலைச் சங்கம் ஒன்று பாடசாலைக்காக நடாத்துகின்ற விளையாட்டுப் போட்டி மற்றும் பாடசாலை விளையாட்டுச் சங்கம் மூலம் நடாத்தப்படும் போட்டித் தொடர்<br>• உயர் கல்வி நிறுவகமொன்றின் மாணவர் சங்கமொன்றினால் மாணவர் நலன்புரிக்காக நடாத்தப்படுகின்ற கச்சேரி | 07% |
| 07 | G | • DINNER DANCE / SING ALONE (உணவுப் பானங்களுடன் விலை ரூபா 3000 இற்குக் கூடுதலான நுழைவுச் சீட்டு) | 07% |
| 08 | H | • தற்சமயம் உயிருடன் இருக்கும் வயது 75 ஐ தாண்டிய மிகவும் சுகயீனமுற்றிருக்கும் மூத்த கலைஞருக்காக மருத்துவ நிதியுதவியின் பொருட்டு அல்லது மூத்த கலைஞரின் இறுதிக் கச்சேரிக்காக கௌரவ முதலமைச்சரினால் விநோத வரியில் இருந்து விடுவிக்கப்பட்ட கச்சேரி (வாழ்நாளில் ஒரு தடவை) | 0% |